முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் – 139/2017

**வாதி தரப்பு சாட்சி–2 – மாணிக்கம் –** திரு.என்.கார்த்திக், இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 16.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:</u>**

1) நான் 7 ம் வகுப்பு படித்துள்ளேன். 1ம் வாதி எனது மனைவி. எங்களுக்கு 1990ம் வருடம் திருமணம் நடந்தது. 1990ம் வருடத்திற்கு முன்பு நான் கடவூர் வட்டம், கீரனூர் கிராமம், தழுமன்கவுண்டனூரில் குடியிருந்தேன். தாவா சொத்து சம்பந்தமாக என் பெயரில் ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரிதான். வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே உள்ள உறவு முறை உண்மைதான் என்றால் ஆமாம். தாவா சொத்தை எனது மனைவிக்கு அவரது தாயார் தான செட்டில்மென்ட் செய்து கொடுத்ததாக வாதி சொல்வது உண்மையா என்றால் பொய், பாகபாத்தியம் விடுதலை ஆவணம் செய்து கொடுத்தார். தாவா சொத்து சம்பந்தமாக எனக்குதான் அனைத்து விபரமும் தெரியும் என எனது மனைவி சொல்லியுள்ளாரா என்றால் ஆமாம். தாவா சொத்தை குறித்து அனைத்து செயல்பாடுகளையும் முன்னின்று செய்ய எனது மனைவி எனக்கு எந்த அதிகாரமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2) தாவா எத்தனை அயிட்ட சொத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 4 அயிட்ட சொத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் அயிட்ட சொத்தின் கிழமேல், தென்வடல் அளவு தெரியுமா என்றால், 10.2 மீட்டர் கிழமேலும், 20 மீட்டர் தென்வடலிலும் உள்ளது. 2 முதல் 4 அயிட்ட சொத்தின் கிழமேல், தென்வடல் அளவு தெரியுமா என்றால் தெரியாது. 1, 2 அயிட்ட சொத்திற்கு இவ்வழக்கில் ஏதேனும் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால், 3ம் அயிட்ட சொத்திற்கு மட்டும்தான் கேட்டுள்ளேன். தாவா சொத்திற்கு கிழக்கில் உள்ள சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் 208, அதன்

உட்பிரிவு தெரியாது. மேற்கே உள்ள சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. கிழக்கு, மேற்கில் உள்ள சொத்துக்களும், தாவா சொத்தும் ஒரே அளவு கொண்டவை என்றால் சரியல்ல, மாறுபாடு கொண்டவை.

3) கிழபுறம் உள்ள சொத்து என்ன அளவு உள்ளது என்றால், கிழமேல் 10 மீட்டர், தென்வடல் 20 மீட்டர். மேற்புறம் உள்ள சொத்து என்ன அளவு உள்ளது என்றால், கிழமேல் 10 மீட்டர், தென்வடல் 20 மீட்டர். தாவா சொத்து மற்றும் கிழக்கு, மேற்கில் உள்ள சொத்துக்களின் புல வரைபடம் பார்த்தேனா என்றால் பார்த்திருக்கிறேன். தாவா சொத்திற்கு கிழக்கில் உள்ள சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு கிழக்கே வெள்ளையன் சொத்து உள்ளது. வெள்ளையன் உயிருடன் இல்லை. 1ம் பிரதிவாதி, வெள்ளையன் மகள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி கிழபுறம் உள்ள சொத்தில் குடியிருக்கிறார் என்றால் சரிதான்.

4) பிரதிவாதிகளின் பதிலுரை விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். பிரதிவாதிகளின் பட்டாவை பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டரா என்றால் பார்வையிட்டார். நீதிமன்ற ஆணையரிடம், நிலஅளவையர் கொடுத்த வரைபடத்தை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை பார்த்தேனா என்றால் இல்லை.

(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**